## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (ஜனவரி-பெப்ரவரி 2018)

# HCS 3142 Hindu Cultural Monuments & Museums

நேரம் : 02 மணித்தியாலங்கள்

**பகுதி–I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி-II இல் இருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி–I

01. "மானிடவியற் பண்பாட்டு ஆய்விற்கு பெரிதும் துணைபுரிபவை அருங்காட்சியகங்கள்." இக்கூற்றைத் துணைக்கொண்டு மேல் வருவனவற்றை விளக்குக.
    (i) அருங்காட்சியகம் - பொருள் விளக்கம் (05 புள்ளிகள்)
    (ii) அருங்காட்சியகங்களின் வகைகள் (07 புள்ளிகள்)
    (iii) அரும் பொருட் பாதுகாப்பு முறைகள் (08 புள்ளிகள்)

02. "இந்தியத் துணைக்கண்டத்தின் சமவெளியையும் திபெத்திய மேட்டு நிலத்தையும் பிரிக்கும் ஒரு புனித மலைத்தொடரே இமயமலை யாகும்." இக்கூற்றைத் துணைக்கொண்டு மேல் வருவனவற்றை விளக்குக.
    (i) அதன் அமைவிடமும் நிலவியலும் (05 புள்ளிகள்)
    (ii) இந்து சமயமும் - இமயமலையும் (20 புள்ளிகள்)

03. "மனித பண்பாட்டின் கதையை அதன் தொடக்க காலத்திலிருந்து தற்காலம் வரை விளக்கி ஆவணப்படுத்தியுள்ளது பிரித்தானிய அருங் காட்சியகம்" இதில் இந்துமதம் சார்பாக காணப்படும் சிற்பங்களை மேல்வரும் அடிப்படையில் விளக்குக.
    (i) பெண் தெய்வங்கள் (12 புள்ளிகள்)
    (ii) ஆண் தெய்வங்கள் (13 புள்ளிகள்)

## பகுதி–II

04. "இந்திய மாநிலமான மகாராஷ்டிராவில் உள்ள உலகப் பாரம்பரிய சின்னங்களுள் எல்லோராவில் உள்ள இந்துக்குகைகளுள் கைலாசநாதர் கோயில் சிறப்பிடம் பெறுகின்றது." ஆராய்க.
    (25 புள்ளிகள்)

05. குஜராத்தின் பாவ்நகர் கோலியாக் பகுதியில் உள்ள நிஷ்கலங் மஹாதேவ் எனும் அதிசயக் கோயில் (பஞ்சபாண்டவர் கோயில்) பெறும் சிறப்பினை ஆராய்க.
    (25 புள்ளிகள்)

06. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கவுரை தருக.
    (i) அமெரிக்க சங்கர நாராயனர் கோயில்
    (ii) பூம்புகார் கலைக்கூடம்
    (iii) உலகில் சிறப்புற்று விளங்கும் முதல் ஐந்து இந்துக் கோயில்கள்
    (25 புள்ளிகள்)

*****